சமூக விஞ்ஞான கற்கை வட்டம்



28-07-2011

## தலைப்பு : அவுஸ்திரேலியாவில் தமிழரும் தமிழும்

**இத்தலைப்பில் மாவை நித்தியானந்தனின் தொடக்கவுரையுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் சுருக்கம் வருமாறு,**

சுமார் 50,000 தமிழ் குடும்பங்கள் வாழ்வதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் கணக்கெடுப்பு சரியாய் நடப்பதில்லை காரணம் குடிசன மதிப்பீடு செய்யும் படிவத்தில் வீட்டு மொழி என்ற கேள்விக்கு பெரும்பாலான தமிழர்கள் ஆங்கிலம் என்று போடுவதால், சரியாக தமிழர்களின் எண்ணிக்கை காட்டப்படுவதில்லை.

சிட்னி, மெல்போர்ன் பகுதிகளில் தமிழர்கள் அதிகம் வாழ்கிறார்கள்.

சில தமிழ் அமைப்புக்களும் அங்கே இருகின்றன உ.ம். : சிலோன் தமிழர் அமைப்பு பின்னர் இது ஈழத் தமிழர் அம்மைப்பாக பெயர்மாற்றம் பெற்றது.

இயங்கும் அமைப்புகள் அங்கே மிகவும் குறைவு.

Silent Majority என்று சொல்வார்களே அதுபோல்தான் அங்கே பல மக்கள் வாழ்கிறார்கள்.

கலையார்வம் என்றால் அங்கே பெரிதும் எங்கள் மக்கள் மத்தியில் இருப்பது பெண்பிள்ளைகள் ஆயின் பரதநாட்டியம், ஆண்பிள்ளைகள் என்றால் மிருதங்கம்.

பெண்பிள்ளைகள் பரதநாட்டியம் பழகவில்லை என்றால் அது பெரிய சமூகக்கேள்வி.

அரங்கேற்றம் அவர்கள் மானப் பிரச்சனை, அதிக செலவில் பல அரங்கேற்றங்கள் நடந்தவண்ணமே இருக்கின்றன.

52% ஆஸ்திரேலியர்கள் தகமைவாய்ந்தவர்களாக இருக்க அங்கே வாழும் தமிழர்கள் 67% ஆனவர்கள் தகமைவாய்ந்தவர்களாக இருக்கின்றனர்.

முன்பு அதிக நாடகங்கள் நடைபெற்றது. தற்போது இந்திய சினிமாப் பாடகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளே அதிக நிதி சேகரிப்புக்காக இடம்பெறுகிறது.

அங்கே காணப்படும் ஒவ்வொரு புதிய கோவில்களும் கோவில் உரிமையாளர்களின் உள்வீட்டுச் சண்டைகளால்தான் உருவாகின.

கோவில்கள் பெரிதும் வியாபார நோக்கமாகவே இருகின்றன. வியாபாரம் இல்லையேல் கோவில்கள் மூடப்படும்.

தமிழர்களின் மத்தியில் நீண்ட கலாச்சார இடைவெளி காணப்படுகிறது.

தமிழர்கள் வாழும் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது குழுச்சண்டைகள் குறைந்தே காணப்படுகிறது.

ஊடக செழுமை அதிகம் நாடு, ஊடகங்கள் எதையும் பேசலாம், அவற்றின் தாக்கம் அதிகம்.

இருந்தும் அங்கே உள்ள தமிழ் ஊடகங்கள் இந்திய சினிமாவையும் தமிழ் தேசிய அரசியலையுமே அதிகம் பேசிவருகின்றன.

தமிழ் தேசிய அரசியல் பேசும் பத்திரிகைகளே அதிகம்.

பத்திரிக்கைகள் பெரிதும் இலவசமாகவே வருகின்றன.

உதயம் போன்ற சில நல்ல பத்திரிகைகள் இல்லாமலே செய்யப்பட்டுவிட்டன.

(மிகுதி அடுத்த பக்கம்)

## எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

04 - 08 -2011

**"தத்தை விடு தூது" பற்றிய அறிமுகம்**
- மு. மயூரன்

11 - 08 -2011

**திருகோணமலை உள்ளூராட்சி தேர்தல் அனுபவங்கள்**
- சத்தியதேவன் சற்குணம்

18 - 08 -2011

**பெரியபுராணமும் அதன் அரசியலும்**
- சபா தனுஜன்

25 - 08 -2011

**வரலாற்றுப் பொருள்முதல்வாதம்**
- சி. சிவசேகரம்



தனிநாயகம் அடிகள் (Rev.Father Xavier S.Thani Nayagam, (ஆகஸ்டு 2, 1913 - செப்டம்பர் 1, 1980)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுநர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல் மாநாட்டினை 1966, ஏப்ரல் 16 - 23 தேதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். Tamil Culture (தமிழ்க் கல்ச்சர்) என்ற ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்துச் செல்லும் பணியில் இணைந்துகொள்ளவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

## அவுஸ்திரேலியாவில் தமிழரும் தமிழும்

முன் பக்கத் தொடர்ச்சி..

24 மணி நேர வானொலிகள் இருந்தாலும் அவற்றில் பெரிதும் தனி நபர் அவதூறுகளே பெரிதும் இடம்பெறுகிறது. அதிக செலவாகும் என்பதால் எதிராக யாரும் வழக்கு பதிவதில்லை.

பல்கலாச்சார ஆதரவு அரசாங்கம் காணப்படுகிறது.

கம்னிஸ்டுகள் தடை செய்யப்பட்டாலும், இடதுசாரி வலதுசாரி அரசாங்க கட்சிகள் உள்ளன.

வலதுசாரிக்கட்சிகளை விட இடதுசாரிக்கட்சிகளுக்கு ஆதரவு உள்ளது.

மேதினம் என்பது அவல நாளாகவே பார்க்கப்படுகிறது, தமிழர்களுக்கு அதுவும் தெரியாது.

முதியோர் பிரச்சனை மிகவும் அதிகம், முதியோர்களை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்றே கூறலாம்.

உ.ம்.: வீட்டுக்கு வெளியே போகவிடாமல் முடக்கி வைப்பது.

திருமணம் முடிக்காமல் சேர்ந்துவாழ்தல் (Living together) பெருகிவருகிறது.

பல்கலைக்கழகம் செல்லும் பிள்ளைகள் பெற்றோரை பிரிந்து தனியாக வாழும் ( Living Out) கலாச்சாரமும் அங்கே காணப்படுகிறது. அதற்கு அரசாங்கமே பணஉதவி செய்கிறது.

தமிழ் பாடசாலைகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறுகிறது. மூன்று வயது முதல் மாணவர்கள் சேர்கப்படுகிறாக்கள்.

தமிழ் படிக்க ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது.

தமிழர்கள் தமிழை தங்கள் அடையாளமாக பார்ப்பதில்லை.

பல்கலைக்கழக உட்புகுமுக தேர்வுக்கு தமிழையும் ஒரு பாடமாக எடுக்கலாம்.

இருந்தும் தமிழை பேச வைத்தல் என்பது பெரும் சவாலாகவே உள்ளது.

பாரதி பாடசாலை அரச பாடத்திட்ட வழிகாட்டி அடிப்படையிலேயே தமிழ் பாடத்திட்டங்களை வகுத்துள்ளது.

பொதுப் பாடத்திட்டம் ஒன்று அங்கே இருக்கும் தமிழ் பாடசாலைகளுக்கு இல்லை என்பது கவலை தரும் விடயம்.



**சமூக விஞ்ஞான வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**

## தத்தை விடு தூது - அறிமுகம்

*04-08-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - மு. மயூரன்*

(சுப்பிரமணிய பாரதியார் பெண்ணியக்கருத்துக்களைத் தமிழ்க் கவிதைகளில் கொண்டுவரத்தொடங்கிய காலத்துக்கு பல ஆண்டுகளுக்கு முன்னமே தீவிரப் பெண்ணியக் கருத்துக்களை தன் கவிதைகளூடு வெளிப்படுத்தியவர் திருகோணமலை த. சரவணமுத்துப் பிள்ளை. அவரது தத்தைவிடு தூது பிரபந்தம் இன்றும் முக்கியத்துவம் பெறத்தக்க வலிமையான பெண்ணியக்கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. நேர்மையும் தீவிரமும் கொண்ட அவரது கருத்துக்கள் மரபான பல நம்பிக்கைகளை அடித்து நொறுக்குவதுடன் அக்காலகட்டத்து தமிழ் இலக்கியப்பரப்பில் மிகுந்த தூரநோக்கோடும் முற்போக்காகவும் அமைகின்றன. அவரையும் அவரது தத்தைவிடு தூது பிரபந்தத்தையும் அவரது பெண்ணியக்கருத்துக்களையும் அறிமுகப்படுத்தும்படியாக இக்கலந்துரையாடல் அமையும். )

* தி. த. சரவணமுத்துப்பிள்ளை பற்றிய சுருக்கமான அறிமுகமும் அவர் வாழ்ந்த காலப்பகுதி, சூழல் பற்றிய குறிப்புக்களும்.

* நா. பாலேஸ்வரியின் தத்தைவிடு தூது குறுநாவலை முன்வைத்து தத்தை விடு தூது எனும் பிரபந்தம் எழுந்த வாழ்க்கைச்சூழல், அப்பிரபந்தத்தின் பின்னணியாய் அமைந்த சரவணமுத்துப்பிள்ளையின் சொந்த வாழ்க்கைக் கதை பற்றிய குறிப்புக்கள்.

* தத்தை விடு தூது எழுந்த காலத்தைய தமிழ் இலக்கியத்தின் பெண்ணியக்கருத்துக்களின் நிலை

* பெண்ணியப்பார்வையில் தத்தைவிடு தூது

* அழகியல் பார்வையில் தத்தைவிடு தூது

* சமகாலத்தில் தத்தைவிடு தூது பெறும் முக்கியத்துவம்

* கேள்விகளும் கலந்துரையாடலும்

# பாடிப்பறை

13 - 08 - 2011

முழுமதி நாளில் கவிதையின் தூறல்

**உரை**
**"ஈழத்துக் கவிதையில் பெண்ணியம் " - ஔவை**

**கவியாற்றுகை**
**கவிஞர் நீலாவணனின் "துயில்" - வே வாசுகி**

**சுப்பிரமணிய பாரதியின் "பரசிவ வெள்ளம்" - லோ. நிலா**

**கவியரங்கம்**
**"பிரிவென்பது"**

**காலை 10.00 - 11.30 வரை.**
**தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில்**